# தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திண்டுக்கல்
# MACOP No. 80/2017

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **எ.ம.சா : 2** | | | | | |
| **பெயர்:** | **:** | **திரு. விஜய ராகவன்** | **தொழில்** | **:** | **ICICI Lombard ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனி, சட்ட மேலாளர்** |
| **தகப்பனார் பெயர்** | **:** | **திரு. ராஜ சேகரன்** | **மதம்** | **:** | **இந்து** |
| **கிராமம்/தாலுகா** | **:** | **மதுரை** | **வயது** | **:** | **35** |
| **மாவட்டம்** | | **மதுரை** | **தேதி** | **:** | **07.11.2025** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது.**

---

**<u>2, 3 எதிர்மனுதாரர்கள் தரப்பு முதல் விசாரணை:-</u>**

நான் மதுரை, ICICI Lombard ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனி, சட்ட மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். இம்மனுவில் எனது முதல் விசாரணை சாட்சியத்திற்காக நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகளை தெரிந்து கொண்டு கையொப்பம் செய்துள்ளேன். விபத்துக்குள்ளான TN 57 AB 0015 வாகனத்தின் காப்பீட்டு சான்றிதழ் Ex.R1 ஆகும்.

**<u>மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :-</u>**

ஆவணங்களின் அடிப்படையில் தான் எனக்கு இந்த வழக்கின் முழுமையான விபரங்கள் தெரியும் என்றால் சரிதான். இவ்வழக்கின் சாட்சியாக மோட்டார் வாகன ஆய்வளாருக்கு சம்மன் அனுப்பப்பட்டு, எங்கள் தரப்பில் அவர் விசாரணை செய்யப்பட்டுள்ளார் என்றால் சரிதான். அவர் தனது சாட்சியத்தில் பொதுமக்கள் நடமாடும் சாலையில் பழகுநர் ஓட்டுநர் உரிமம் உள்ள நபர் வாகனத்தை ஓட்டக்கூடாது என்று எந்த விதியும் இல்லை என்றாலும், வழக்கிற்காக நான் அவ்வாறு பொய்யாக

சொல்லியுள்ளேன் என்றாலும் சரியல்ல. மேற்படி விதியில் பழகுநர் ஓட்டுநர் உரிமம் உள்ள நபர், அருகில் முறையான ஓட்டுநர் உரிமம் உள்ள நபரை வைத்துக் கொண்டு வாகனத்தை ஓட்டலாம் என்றால் சரியல்ல. சாட்சியிடம் சா.சா.ஆ. 2 காட்டப்பட்டு, அதில் பழகுநர் ஓட்டுநர் உரிமம் உள்ள நபர் தன் அருகில் முறையான ஓட்டுநர் உரிமம் உள்ள நபர் இருந்தாலொழிய எந்த ஒரு மோட்டார் வாகனத்தையும் ஓட்டக்கூடாது என்று கண்டுள்ளது என கேட்டால் சரிதான். மேற்படி விபத்து சம்மந்தமாக இந்த ஓட்டுநர் மீது குற்றவியல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, அதில் அவர் விடுதலை செய்யப்பட்டுள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது.

இந்த விபத்து சம்மந்தமாக வாகன சேதத்திற்காக இழப்பீடு கேட்கப்பட்டு, அதை நாங்கள் மறுத்ததால், திண்டுக்கல், நுகர்வோர் மன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டு, அதில் இழப்பீடு வழங்க சொல்லி 30.09.2025ம் தேதி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால், எனக்கு தெரியாது. ஒரே நிறுவனமாக இருந்ததாலும் வெவ்வேறு பிரிவுகள் என்பதால் இந்த விபரம் எனக்கு தெரியாது. விபத்து தேதியில், விபத்துக்குள்ளான வாகனத்திற்கு முறையான காப்பீடு நிலுவையில் இருந்தது என்றால் சரிதான். அதன் காரணமாக இந்த மனுவில் கோரியுள்ள இழப்பீட்டை நாங்கள் செலுத்த கடமைப்பட்டுள்ளோம் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை :– இல்லை.</u>**

Taken down by me/before me in open court on 07.11.2025 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

Chief Judicial Magistrate,
Dindigul.